Crl.Misc/ 39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN.

Calendar Case No.CC.11/2019
Miscellaneous
Preliminary Register
Deposition of Witness for _PW - 1 (LW- 1 ) _/_

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாரியம்மாள் | Father Name | : | பொன்னையன் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of September 2022.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரையூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை பார்த்து வருகிறேன்- ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இன்றிலிருந்து சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு இரவு 9 மணியளவில் நானும் எனது மகனும் எங்களது வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது வீட்டிற்கு வெளிப்புறம் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. சாப்பிட்டுக்கொண்டிருந்த எனது மகன் வெளியில் சென்று பார்த்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் மீனா மூவரும் குடிபோதையில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தவர்கள், வெளியில் சென்ற எனது மகனை மூங்கில் சட்டத்தால் ஒரே அடியாக இடது கை தோள்பட்டையில் அடித்து விட்டார்கள்.

வெளியே சென்ற எனது மகனை காணவில்லையே என்று வீட்டின் உட்புறத்திலிருந்து வெளியே வந்து பார்த்த போது சக்திவேல் மூங்கில் சட்டத்தால் எனது தலையில் அடித்து விட்டார். அதில் எனக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. மயக்கம் ஏற்பட்டு மயக்க நிலையில் இருந்தேன்.

மயக்கத்தில் இருந்த என்னையும் காயம்பட்ட எனது மகனையும் எனது ஊரைச்சேர்ந்த ஒருவர் நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். மேற்படி சிகிச்சைக்கு சேர்த்த விவரத்தை நான் மயக்கம் தெளிந்தவுடன் அறிந்து கொண்டேன். நீடாமங்கலம் அரசு .மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக நான் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

என்னையும் எனது மகனையும் தாக்கியவர்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் ஆஜர் எதிரிகள் இருவரும் தான் என்னையும் எனது மகனையும் மூங்கில் சட்டத்தால் தாக்கியவர்கள் ஆவார்கள். நான் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வலங்கைமான் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவரிடம் நடந்த விவரத்தை வாக்குமூலமாக கொடுத்தேன். அப்போது போலீசார் புகார் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு கைரேகை வாங்கிக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான்.

**(சாட்சியின் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ,1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

Crl.Misc/ 39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN.

Calendar Case No.CC.11/2019
Miscellaneous
Preliminary Register
Deposition of Witness for PW - 2 (LW- 2 ) /

| Name | : | குருமூர்த்தி | Father Name | : | பொன்னையன் |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of September 2022.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரையூரில் குடியிருந்து வருகிறேன். நான் தூய்மை பணியாளரா வேலை பார்த்து வருகிறேன்- அ.சா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் தான். கடந்த 09.06.2018 ம் தேதி இரவு 9.00 மணியளவில் நான் வேலை முடிந்து வீட்டிற்கு வந்தேன். அப்போது ஆஜர் 2 வது எதிரியின் மனைவியும் எனது மனைவியும் சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள்.

நான் அவர்களிடம் ஏன் இரவு நேரத்தில் சத்தம் போட்டு கொண்டிருக்கிறீர்கள் எதுவாக இருந்தாலும் காலையில் ஊர்க்காரர்களை வைத்து பேசலாம் என்று கூறி எனது அம்மாவையும் எனது மனைவியையும் வீட்டிற்கு அழைத்து வந்த போது ஆஜர் எதிரிகள் கோபால் மற்றும் சக்திவேல் இருவரும் எங்களுக்கு பின்னால் வந்து மூங்கில் சட்டத்தால் என்னை இடது கை தோள் பட்டையில் அடித்தார்கள். எனது அம்மாவை இருவரும் மூங்கில் சட்டத்தால் தலையில் அடித்தார்கள்.

எதிரிகள் இருவரும் என்னையும் எனது அம்மாவையும் தாக்கியதில் எனக்கு இடது கை தோள்பட்டையில் பலத்த காயமும் எனது அம்மாவிற்கு தலையில் ரத்தக் காயமும் ஏற்பட்டது. சம்பவயிடத்தில் இருந்த ஊர்க்காரர்கள் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து ஆம்புலன்ஸ் மூலம் நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக என்னையும் எனது அம்மாவையும் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

Crl.Misc/ 39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN.

Calendar Case No.CC.11/2019
Miscellaneous
Preliminary Register
Deposi ணுtion of Witness for PW - 3 (LW- 5 ) /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயராமன் | Father Name | : | அய்யாகண்ணு |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | ணு | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of September 2022.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரையூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன்- அ.சா.1 மற்றும் 2 ஐ தெரியும். எனது வீட்டிற்கு எதிர்வீட்டுக்காரர்கள் தான். ஆஜர் எதிரிகளைத் தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் தான். அ.சா.1 , 2 மற்றும் ஆஜர் எதிரிகளுக்கிடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வேண்டி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 09.06.2018 ம் தேதி இரவு 9.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1 , அ.சா.2 ஐயும் ரீப்பர் சட்டத்தால் தாக்கினார்கள் என்றும் அதில் அ.சா.1 க்கு தலையிலும்,

அ.சா2 க்கு இடது கை தோள் பட்டையிலும் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகள் இருவரும் அ.சா.1, 2 க்கு கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவம் குறித்து 21.06.2018 ம் தேதி காலை 11.30 மணியளவில் வலங்கைமான் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் சங்கர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல- எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சயமளிக்கிறேன் என்றால் சரியல்ல.